தினமணி

**தொடர் மழை: 45,585 ஏக்கர் மக்காச்சோளம் பாதிப்பு**

First Published : 06 Dec 2010 01:04:02 PM IST

பெரம்பலூர், டிச. 5: பெரம்பலூர் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் சுமார் 45,585 ஏக்கர் மக்காச்சோளம் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த பருத்தி, மஞ்சள், வெங்காயம் உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 861 மி.மீட்டர். நவம்பர் வரை 797 மி.மீ. மழை பெய்ய வேண்டும். ஆனால், இதுவரை 919 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. இதனால், மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால், மானாவாரி பயிர்கள் அதிகளவு சேதமடைந்துள்ளன.

பெரம்பலூர் மாவட்டத்தில் 78,750 ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளது. இதில் பெரம்பலூர் வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள 15,830 ஏக்கர் மக்காச்சோளத்தில் 6000 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளது.

வேப்பந்தட்டை வட்டாரத்தில் 21,895 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த மக்காச்சோளம் 100 சதம் பாதிக்கப்பட்டுள்ளது. வேப்பூர் வட்டாரத்தில் 26,718 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டிருந்ததில், 11,250 ஏக்கர் மக்காச்சோளம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேபோல, ஆலத்தூர் வட்டாரத்தில் பயிரிடப்பட்டிருந்த 14,307 ஏக்கரில் 6,460 ஏக்கர் மக்காச்சோளம் பாதிப்படைந்துள்ளன. பெரம்பலூர் மாவட்டத்தில் மொத்தம் 45,585 ஏக்கர் மக்காச்சோளம் பாதிப்படைந்துள்ளது.

இதேபோல, 68,628 ஏக்கர் பரப்பளவில் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. இதில் பெரம்பலூர் வட்டாரத்தில் 6,215 ஏக்கரில் 5,625 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளது. வேப்பந்தட்டை வட்டாரத்தில் பயிரிடப்பட்டிருந்த 24,460 ஏக்கரில் 13,625 ஏக்கர் பருத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

வேப்பூர் வட்டாரத்தில் பயிரிடப்பட்டிருந்த 21,703 ஏக்கரில் 8,063 ஏக்கர் பருத்தி பாதிப்படைந்துள்ளது. ஆலத்தூர் வட்டாரத்தில் 16,250 ஏக்கர் பருத்தியில் 10,625 ஏக்கர் பாதிப்படைந்துள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் மொத்தம் 37,938 ஏக்கர் பருத்தி சேதமடைந்துள்ளது. மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால், பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளதாக வேளாண் அலுவலர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

தொடர்ந்து பெய்து வரும் மழையால் நெல் பயிர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் சூழல் உள்ளது. மேலும், இதரப் பயிர்களின் பாதிப்பு குறித்து, வேளாண் அலுவலர்கள் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**"50% மானியத்தில் நெல் விதைகள்'**

First Published : 06 Dec 2010 01:40:36 PM IST

செய்யாறு,டிச. 5: செய்யாறு பகுதி விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் நெல்விதைகள் வழங்கப்படுகின்றன என்று வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம். சாந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பது:

ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டம் மற்றும் விதை கிராமத் திட்டத்தின்படி, விவசாயிகளுக்கு நவரை பருவத்துக்குத் தேவையான நெல் விதைகள் ஆடுதுறை 43 மற்றும் ஆடுதுறை 45 விதைகள் 50 சதவீத மானியத்தில் விதைகள் வழங்கப்படுகின்றன.

செய்யாறு, திருமணி வேளாண்மை விரிவாக்க மையங்களில் இவற்றை விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம் என்றார் சாந்தி.

**ஏக்கருக்கு ரூ. 15,000 இழப்பீடு வழங்கக் கோரிக்கை**

First Published : 06 Dec 2010 01:17:44 PM IST

தஞ்சாவூர், டிச. 5: மழையால் பாதிக்கப்பட்ட நெல் பயிருக்கு ஏக்கருக்கு ரூ. 15,000 வரை இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

இதுதொடர்பாக ஞாயிற்றுக்கிழமை அவர்கள் கூறியது:

ஆறுபாதி கல்யாணம் (டெல்டா மாவட்ட விவசாய சங்கங்களின் பேரவை பொதுச் செயலர்): கடந்த 10 நாள்களில் இயல்பான அளவைவிட மாவட்டம் வாரியாக தஞ்சாவூரில் 449 சதம், திருவாரூரில் 524 சதம், நாகப்பட்டினத்தில் 333 சதம் கூடுதலாக மழை பெய்துள்ளது. கடைமடை வடிகால் மாவட்டங்களான திருவாரூர், நாகப்பட்டினத்தில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 15,000 வரை செலவிட்டுள்ளனர். எனவே, அந்த அளவுக்கு இழப்பீடு அளிக்க வேண்டும். மத்திய அரசின் பேரிடர் நிவாரண நிதியை சுட்டிக்காட்டி கூடுதல் இழப்பீட்டுக்கு அதிக நிவாரணம் ஒதுக்க முதல்வர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சுவாமிமலை சுந்தரவிமலநாதன்: அரசால் மழை, வெள்ள பாதிப்புகளை பார்வையிட நியமிக்கப்பட்ட அதிகாரிகளால், இரண்டு நாள்களில் மாவட்டம் முழுவதும் உள்ள சேதங்களைப் பார்வையிட முடியாது. சேத விவரங்களை அடிப்படையாக வைத்துதான் இழப்பீடும், நிவாரண நிதியும் ஒதுக்க முடியும். எனவே, சேத விவரங்களை முழுமையாக பார்வையிடும் வகையில், அதிகாரிகளுக்கு கூடுதல் நாள்களை ஒதுக்கி உத்தரவிட வேண்டும். ஹெலிகாப்டர் மூலம் சேத விவரங்களைப் பார்வையிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தக்காளிப் பயிரில் கருகல் நோய்**

First Published : 06 Dec 2010 03:03:53 PM IST

கிருஷ்ணகிரி, டிச.5: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 500 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ள தக்காளிப்பயிரில் கருகல் நோய் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் முக்கிய விளைபொருளாக தக்காளி உள்ளது. கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், ஒசூர், தேன்கனிக்கோட்டை, தளி, ராயக்கோட்டை, சூளகிரி உள்ளிட்ட மாவட்டத்தின் பல பகுதிகளில் சுமார் 3 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தக்காளி பயிரிடப்பட்டுள்ளது. கடந்த 1 மாதங்களுக்கு முன்பு விதைக்கப்பட்ட பயிர்களில் தற்போது காய் பிடித்து, ஏறக்குறைய அறுவடைக்குத் தயாராக உள்ளது. இந்நிலையில் மாவட்டத்தில் நிலவும் குளிர்ந்த காலநிலையால் பயிர்கள் கருகல் நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. இது விவசாயிகளைக் கவலையுறச் செய்துள்ளது.

இதுகுறித்து கிருஷ்ணகிரி அருகே உள்ள எலுமிச்சங்கிரியைச் சேர்ந்த விவசாயி கோவிந்தன் கூறியது:

பூக்கும் பருவத்தில் உள்ள செடிகளில் கருகல் நோய் பாதிப்பு அதிகம் உள்ளது. இலைப்பகுதியில் காணப்படும் நீர்க்கசிவுடன் கூடிய புள்ளிகள் வேகமாகப் பரவி இலை பழுப்பு கலந்த கருமை நிறமாக மாறிவிடுகிறது. தண்டுப்பகுதி அழுகி ஒருவித துர் நாற்றம் வீசுகிறது என்றார். இதுகுறித்து, டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் டி. சுந்தர்ராஜ் கூறியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது நிலவும் தட்பவெப்ப நிலை கருகல் நோய் ஏற்படக் காரணமாக உள்ளது. மிக அதிகமான ஈரப்பதமும், குறைந்த வெப்பநிலையும் காணப்படும் பகுதிகளில் இந்நோய் வேகமாகப் பரவும். நோய் பாதிப்புக்கு உள்ளான இடங்களில் ஒரு லிட்டர் தண்ணீரில் பைட்டலோன் என்ற மருந்தை 2.5 கிராம் அல்லது குளோரோதலோனில் 1.5 கிராம் என்ற அளவில் கலந்து இலையின் இரண்டு பகுதிகளும் நன்கு நனையுமாறு தெளிக்கலாம். நோய் பாதிப்பு அதிகமாக இருந்தால் 15 நாட்கள் இடைவெளியில் மற்றொரு முறையும் தெளிக்கலாம்.

மேலும் விபரங்களுக்கு 04343-296039 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு அவர் தெரிவித்தார்.

கழிப்பறைக் கட்டணம் முறைப்படுத்தப்படுமா?

கிருஷ்ணகிரி நகராட்சியின் புதிய பஸ் நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பறை தனியார் பராமரிப்பில் உள்ளது. இங்கு கட்டண விபரங்கள் முறையாக எழுதப்படாததால் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டிய நிலைக்கு பயணிகள் ஆளாகியுள்ளனர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு பஸ் நிலையத்தில் ஆட்சியர் வி. அருண் ராய் ஆய்வு மேற்கொண்ட போது கழிப்பறையில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து கட்டண

விவரங்களை எழுதுமாறு அவர் உத்தரவிட்டும் இதுவரை அந்த உத்தரவு அமல்படுத்தப்படவில்லை. அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

-என்.நவாப், பழையபேட்டை.

தினமலர்

**வடமாநில புளி வரத்து சரிவு: தமிழகத்தில் விலை கிடுகிடு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,02:00 IST

சேலம்: தமிழகத்தில் பொதுவாக மார்ச் முதல் வாரத்தில் துவங்கும் புளி சீஸன் ஜுன் மாதம் வரை இருக்கும். இந்த காலங்களில் புளியின் விலையில் சரிவு ஏற்படுவது வழக்கம். ஆனால், நடப்பாண்டு சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் எதிர்பார்த்த விளைச்சல் இல்லை. சேலம், மதுரை, திருச்சி, சென்னை உள்ளிட்ட இடங்களில் செயல்படும் புளி மண்டிகளுக்கு விற்பனைக்கு வரும் புளியின் வரத்தும் மிகவும் குறைவாகவே இருந்தது. இம்மண்டிகளுக்கு வடமாநிலங்களில் இருந்து அதிக அளவில் புளி விற்பனைக்கு குவிந்தது.

தற்போது மகாராஷ்டிரா, பீகார், சத்திஸ்கர், ஒரிஸா மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த புளியின் வரத்தில் திடீர் சரிவு ஏற்பட்டது. கடந்த மாதம் வரை இம்மாநிலங்களில் இருந்த வாரத்துக்கு 500 லாரிகளில் வந்து கொண்டு இருந்த புளி தற்போது 100 லாரிகளில் மட்டுமே வருகிறது. இதுவும் விரைவில் பாதியாக குறைந்து விடும் என வியாபாரிகள் மத்தியில்  தகவல் பரவி வருகிறது. இந்நிலையில் சேலம் மாவட்டத்தில் புளி அதிக அளவில் விளையும் வாழப்பாடி, ஆத்தூர், ஏற்காடு, கல்ராயன் மலைப்பகுதி, தர்மபுரி மாவட்டம் அரூர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் தொடர்ந்து பெய்து வரும் மழையால் புளி அறுவடையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சேலம் லீபஜாருக்கு விற்பனைக்கு வரும் புளியின் வரத்து குறைந்துள்ளது.

குறைந்த அளவில் விற்பனைக்கு வரும் புளியும், தொடர் மழை காரணமாக குறிப்பிட்ட நேரத்துக்கு தமிழகத்துக்கு வந்து சேர்வதில்லை. சேலம் மாவட்டத்தில் புளி விலை ஒரு மாதமாக  உயர்ந்து வருகிறது.  அக்டோபர் முதல் வாரத்தில் 45 ரூபாய்க்கு விற்ற புளி படிப்படியாக உயர்வை சந்தித்து,  நவம்பர் முதல் வாரத்தில் 65 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.இந்நிலையில் கடந்த வாரம் புளியின் விலையில் கிலோவுக்கு 10 ரூபாய் அதிகரித்து 75 ரூபாய்க்கு விற்பனை

செய்யப்பட்டது. வடமாநிலங்களில் புளிக்கு ஏற்பட்டுள்ள தட்டுபாடு காரணமாக இதன் விலையில் கிலோவுக்கு மேலும்  25 ரூபாய் உயர்ந்து கிலோ 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**மஞ்சளுடன் ஊடுபயிராய் மிளகாய்: பவானிசாகர் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,02:12 IST

டி.என்.பாளையம்:மஞ்சளுக்கு ஊடுபயிராய் மிளகாய் பயிரிடுவதில் பவானிசாகர் பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். பவானிசாகர் பகுதியில் கொத்தமங்கலம், ராஜன் நகர், பசுவபாளையம், புங்கார், தொட்டம்பாளையம், எரங்காட்டூர் பகுதி விவசாயிகள் மஞ்சளுடன் ஊடுபயிராய் மிளகாய் பயிரிட்டுள்ளனர். மஞ்சள் பத்து மாதப்பயிர். வைகாசி மாதம் நடவை துவங்கி மாசி மாதம் அறுவடை முடியும். ஒரு ஏக்கருக்கு மஞ்சள் பயிரிட 750-800 கிலோ விதை மஞ்சள் தேவைப்படுகிறது.

ஒரு கிலோ விதை மஞ்சள் 30-40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. வெட்டுக்கூலியோடு சேர்த்து ஏக்கருக்கு நடவு செலவு ஒரு லட்சம் ரூபாய் ஆகிறது. ஒரு ஏக்கருக்கு 15-20 டன் வரை அறுவடை கிடைக்கிறது. சென்றாண்டு மஞ்சள் விலை உச்சியை தொட்டதையடுத்து இம்முறை மஞ்சள் சாகுபடி இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. மஞ்சள் விளைவிப்பதன் மூலம் நல்ல வருமானம் பெற முடியும் என்று விவசாயிகள் நம்பி பெருமளவில் மஞ்சள் பயிரிட்டுள்ளனர். மஞ்சளுடன் ஊடுபயிராக வெங்காயத்தைதான் பெரும்பாலான விவசாயிகள் பயிரிடுவது வழக்கம். ஆனால், பவானிசாகர் பகுதி விவசாயிகள் மஞ்சளுக்கு ஊடுபயிராக மிளகாயை பயிரிட்டுள்ளனர். மிளகாய் பயிரிடுவதால் விளைச்சல் அதிகரிப்பதோடு, லாபமும் பெருகுவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

**இயற்கை விவசாயமே எங்கள் உயிர் மூச்சு ராமரணை கிராம விவசாயிகள் பெருமிதம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,02:15 IST

டி.என்.பாளையம்:திம்பம் அருகே உள்ள ராமரணை கிராம மக்கள் இயற்கை விவசாயம் புரிந்து நல்ல விளைச்சலை பெற்று முன்னோடியாக உள்ளனர்.சத்தியமங்கலத்தில் இருந்து 27 கொண்டை ஊசி வளைவுகளை கடந்து சென்றால் திம்பம் மலைப்பகுதி வரும். அங்கிருந்து தலமலை வழியாக சென்றால் 20வது கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது ராமரணை என்னும் நஞ்சுபடாத கிராமம். இயற்கையான காற்று; திரும்பிய பக்கமெல்லாம் பச்சைப் பசேல் என்று வளர்ந்து நிற்கும் மரங்கள் காணப்படுகிறது.

யானை நடமாட்டம் அதிகமுள்ள இந்த கிராமத்தில் 15 குடும்பங்களில் 60க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். மின்சார வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி எதுவுமின்றி இயற்கையோடு அப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வனத்தை நேசித்து பழகிப்போன மக்களுக்கு வன விலங்குகளை பார்த்தும் பயம் கிடையாது. 70க்கும் மேற்பட்ட ஏக்கரில் மானாவாரியாக இயற்கை விவசாயம் செய்து வருகின்றனர். பெரும்பாலான விவசாயிகள் இன்று செயற்கை ரசாயன உரங்களை கொண்டு பயிரிடுகின்றனர். ஆனால், இந்த கிராமத்தை சேர்ந்த சில விவசாயிகள் இயற்கை விவசாயம் செய்கின்றனர். இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வாரின் வானகம் போன்ற சில பசுமை அமைப்புகளும் ஊர் ஊராய் சென்று இயற்கை விவசாயத்தை பறைசாற்றி வருகின்றனர்.

ராமரணை கிராமம் மழை வளம் அதிகமுள்ள கிராமம். மானாவாரி விவசாயம் இங்கு செழிப்போடு உள்ளது. இப்பகுதி மக்களின் விவசாய முறையே வித்தியாசப்பட்டது; வனத்தில் உள்ள காய்ந்த இலைகள், சருகுகள் மேலும் கால்நடை கழிவுகள் முதலியவற்றை கொண்டு உரம் தயாரித்து பயன்படுத்துகின்றனர்.  பீன்ஸ், ராகி, எள் போன்றவற்றை பயிரிடுகின்றனர். இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை ஈரோடு, திருப்பூர், கோத்தகிரி பசுமை அங்காடிகளில் விற்பனை செய்கின்றனர். இயற்கை முறையில் விளைவித்த பொருட்களுக்கு சந்தையில் அதிக விலை கிடைக்கிறது.

ராமரணையை சேர்ந்த ராமன் கூறியதாவது: பல ஆண்டுகளாக நாங்கள் இயற்கை விவசாயம் செய்து வருகிறோம். கண்ட கண்ட ரசாயன உரம் போட்டு மண்ணை பாழ்படுத்த விரும்ப மாட்டோம். இயற்கை விவசாயத்திலேயே எல்லாம் கிடைக்கும் போது எதுக்கு செயற்கை. சுடர் நிறுவனம் மூலம் மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி நடந்தது. இப்போது நாங்களே மண்புழு உரம் உற்பத்தி செஞ்சுக்கறோம்; நல்ல விளைச்சல், நல்ல விலை இரண்டுமே கிடைக்குது. காட்டுக்குள்ளே இயற்கையோட ஒன்றி வாழ்கிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

**சுகாதாரமாக இறைச்சி பதப்படுத்தும் பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,02:26 IST

பெருந்துறை: தேசிய இறைச்சி பதப்படுத்துதல் வாரியம், தஞ்சாவூர் இந்திய பயிர் பதன தொழில் நுட்ப கழகம் மற்றும் பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரி இணைந்து, சுகாதாரமான முறையில் இறைச்சியை கையாள்வது மற்றும் பதப்படுத்துதல் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாமை கல்லூரி வளாகத்தில் நடத்தியது. கொங்கு பொறியியல் கல்லூரி பேராசிரியர் கிருஷ்ணசாமி

தலைமை வகித்தார். உணவு தொழில் நுட்பவியல் துறைத் தலைவர் சிவகுமார் வரவேற்றார். ஈரோடு கலெக்டர் சவுண்டையா முகாமை துவக்கி வைத்தார். தஞ்சாவூர் இந்திய பயிர் பதன தொழில் நுட்ப கழக இயக்குனர் அழகுசுந்தரம், மூத்த ஆராய்ச்சியாளர் சுலோசனா, அதிகாரி பரந்தாமன், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி இணை பேராசிரியர் நரேந்திர பாபு ஆகியோர் பேசினர். முகாமில் கலந்து கொண்ட இறைச்சி விற்பனையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இறைச்சி வெட்டும் போது பயன்படுத்தும் சீருடை மற்றும் கையேடு வழங்கப்பட்டது.

**காட்டுத்தோட்டத்தில் எண்ணெய் வித்துப்பயிர் சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,01:17 IST

கும்பகோணம்: தஞ்சை மாவட்டம் காட்டுத்தோட்டம் மண், நீர், மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் சாக்கோட்டை உழவர் பயிற்சி நிலையம் சார்பில், எண்ணெய் வித்து பெருக்குத் திட்டத்தில் 50 விவசாயிகளுக்கான பயிற்சி இரண்டு நாட்கள் நடந்தது.தஞ்சாவூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் லோகநாதன் துவக்கி வைத்து எள் சாகுபடியின் அவசியம் குறித்துப் பேசினார். முதல்நாள் பேராசிரியர் சந்திரசேகரன் தலைமையில் நடந்த பயிற்சியில் எண்ணெய் வித்து பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும், பற்றாக்குறையும் உற்பத்தி திறனும் மேம்படுத்தும் வழிமுறைகளையும் விளக்கினார்.

பேராசிரியர் வள்ளல்கண்ணன் எண்ணெய் வித்து பயிர்களின் தொழில்நுட்பம் மற்றும் இயந்திர மயமாக்குதல் பற்றி பேசினார். முனைவர் சுபா, விவசாய பயிற்சியில் கலந்துகொண்டு எண்ணெய் பயிர்களின் ரகங்கள் மற்றும் அதன் சிறப்பியல்புகள் குறித்தும், உழவியல் பேராசிரியர் ரெங்கராஜு நிலக்கடலை, எள் சாகுபடி தொழில்நுட்பம் குறித்தும், உதவிப்பேராசிரியர் பாலசுப்ரமணியன் ஜெட்ரோபா சாகுபடி சம்மந்தமான தொழில்நுட்பங்களை விளக்கினார்.

இரண்டாம் நாள் பயிற்சியில் பரமேஸ்வரி எண்ணெய் வித்து பயிர்களில் விதை உற்பத்தி செய்யும் முறைகளையும், உதவிப்பேராசிரியர் சுகன்யா எண்ணெய் வித்துப்பயிர்களில் உரநிர்வாகம் குறித்தும், உதவிப்பேராசிரியர் சித்ரா எண்ணெய் வித்து பயிர்களில் நோய் நிர்வாகம் குறித்தும் விளக்கினர். தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் ராமதாஸ் பயிற்சியில் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சியின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள் பற்றியும் விளக்கினார்.ஏற்பாட்டினை சாக்கோட்டை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் கோவிந்தன், வேளாண்மை அலுவலர் சந்திரசேகரன் ஆகியோர் செய்திருந்தனர்.பயிற்சியில் கலந்து கொண்ட தஞ்சாவூர், பூதலூர், ஒரத்தநாடு, திருவோணம் ஆகிய யூனியன்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

**பாதித்த விவசாயிக்கு பொங்கல் ஊக்கத்தொகை : காங்., விவசாய பிரிவு பொதுச் செயலாளர் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,01:24 IST

திருத்துறைப்பூண்டி: ""வெள்ள நிவாரணப்பணிகளை தீவிரப்படுத்தவும், ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் நிவாரணமும், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு பொங்கல் ஊக்கத்தொகைøயாக 10 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும்,'' என்று தமிழ்நாடு காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு பொதுச் செயலாளர் நெடுவை ராஜதுரை கோரிக்கை விடுத்துள்ளார். முதல்வருக்கு அவர் அனுப்பிய மனுவில் கூறியதாவது: அனைத்து ஆறுகளிலும் ஆக்ரமிப்புக்களை அகற்ற, கரைகளை உயர்த்தி அகல்படுத்துவதுடன், கிராமப்புறங்களில் உள்ள கிளை வாய்கால்களிலும் ஆக்ரமிப்புக்களை அகற்றி கரைகளை உயர்த்த வேண்டும். தொலைநோக்கு பார்வையுடன் உருவாக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் நிதி நெருக்கடியிலும், நிர்வாக சீர்கேட்டாலும் தற்போது பலவீனமடைந்து வருகிறது. இதை சீர்படுத்தி, முழுமையான பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்.

மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் திட்டங்களை எளிமைப்படுத்தி தேசிய வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்க வேண்டும். பயிர் காப்பீட்டு திட்டத்தில் தற்போதுள்ள நிலையை மாற்றி ஒவ்வொரு விவசாயியும் முழுமையாக பயன்பெறும் வகையில் தனி நபர் பயிர் காப்பீட்டு திட்டத்தை கட்டாயமாக்கி, அமல்படுத்த வேண்டும். காவிரி பாசனப்பகுதிகளில் முழுமையிலும் ஆறுகள், வாய்கால்களை தொலை நோக்குப்பார்வையுடன் பொதுப்பணித்துறையினர் கவனம் செலுத்தி தூர்வார வேண்டும். ஆற்றுக்கரைகளில் வாகனங்கள் செல்லும் அளவுக்கு செம்மைப்படுத்தி, ஆறுகளில் ஆகாயத்தாமரை, காட்டமாணக்கு போன்றவற்றை முழுமையாக அகற்றினால், வெள்ளம் ஏற்படாமல் தடுக்க முடியும். இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டார்.

**நெற்பழம் நோய் தடுப்பு குறித்து, வேளாண் அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,01:22 IST

கும்பகோணம்: கும்பகோணம் அருகே சாக்கோட்டை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் கோவிந்தன் நெற்பழம் நோய் தடுப்பு குறித்து யோசனை தெரிவித்தார். நெற்பழம் நோய் கோ 43 ரக நெல்லில் அதிகமாக தாக்கும். இந்நோய் கதிர் வெளிவந்த நிலையில் நெல்மணிகளில் மேல் பால்பிடிக்கும் தருணத்தில் ஒருவித பழம் போன்ற பூசணம் காணப்படும்.

இதனால், மகசூல் பெருமளவில் பாதிக்கப்படும். ஒரு கிலோ விதைக்கு சூடோமோனஸ் பத்து கிராம் அல்லது கார்பன்டாசிம் இரண்டு கிராம் மற்றும் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து ஈர விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

நோய் அறிகுறி தென்படும் முன் டில்ட் 0.1 சதம் அல்லது காப்பர் ஹைட்ராக்சைடு 500 கிராம் ஒரு ஏக்கர் என்ற அளவில் பூக்கும் தருணத்திலும், பால் பிடிக்கும் தருணத்திலும் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். தேவையில்லாமல் தழைச்சத்து உரங்களை இடக்கூடாது. மேற்கண்ட மருந்து கிடைக்காத பட்சத்தில் சூடோமோனோஸ் எதிர் பூஞ்சால மருந்தினை நோய் அறிகுறி தென்படும் முன் ஏக்கருக்கு 400 கிராம் என்ற அளவில், பூக்கும் தருணத்திலும், பால்பிடிக்கும் தருணத்திலும் 200 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**தோட்டக்கலைத்துறை பட்டியலில் இடம் பெறாத கறிவேப்பிலை! : விவசாயிகள் கண்ணீர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,01:51 IST

ஆத்தூர்: சேலம் மாவட்டத்தில் பயிர் பட்டியலில் இடம் பெறாததால், "கறிவேப்பிலை' பயிரிடும் விவசாயிகள் அரசு மானியம், பயிர் கடன் உள்ளிட்ட சலுகைகள் பெற வழியின்றி தவித்து வருகின்றனர். மேலும், நோய் தாக்கி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் நிவாரணத்திற்கு வழியின்றி விவசாயிகள் கண்ணீர் வடித்து வருகின்றனர். சேலம் ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் பகுதியில் வாசனை பயிரான கறிவேப்பிலை 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டு வருகிறது.

ஆத்தூர், தலைவாசல் பகுதியில் பயிர் செய்துள்ள கறிவேப்பிலை, "ருசி' மிகுந்து காணப்படுவதால் வியாபாரிகள் அதிகளவில் வாங்கி செங்கின்றனர். தலைவாசல் தினசரி காய்கறி மார்க்கெட்டிலிருந்து நாள்தோறும் சேலம், கோவை, திருச்சி, மதுரை, சென்னை, புதுச்சேரி, கேரளா என பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.
ஒவ்வொரு மாவட்டத்திலும் விளைநிலத்தில் விளைவிக்கப்படும் பயிர்கள் அதன் விபரங்களை மாவட்ட வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை பட்டியலில் பதிவு செய்யப்படுகிறது. அதைதொடர்ந்து பட்டியலில் இடம் பெற்றுள்ள பயிர்களுக்கு மத்திய, மாநில அரசு மூலம் பயிர் கடன், மானியம் உள்ளிட்டவைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

அதன்படி சமைக்கும் உணவு பொருட்களின் வாசனையை கூட்ட பயன்படும் கறிவேப்பிலையில், வைட்டமின் "ஏ' மற்றும் இரும்பு சத்து அதிகளவில் உள்ளதோடு ஞாபக சக்தியை அதிகரிக்கவும் கறிவேப்பிலை பயன்படுகிறது. மருத்துவ குணம் வாய்ந்த கறிவேப்பிலை பயிர், மாவட்ட வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை பட்டியலில் இதுவரை இடம் பெறாமல் உள்ளது. அதனால் கறிவேப்பிலை பயிரிடும் விவசாயிகளுக்கு அரசு மானியம், கடன் மற்றும் நோய் தாக்கம், மழை நிவாரணம் உதவிகள் கிடைப்பதில்லை. இந்நிலையில், சில வாரங்களாக பெய்து வரும் பருவ மழையில் ஆத்தூர் சுற்றுவட்டார பகுதியில் பயிர் செய்துள்ள கறிவேப்பிலையில் இலைபுள்ளி, பூஞ்சானை நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது.கறிவேப்பிலை இலைகள் முழுவதும் கரும்புள்ளிகளும், சாம்பல் படிந்தது போன்று காணப்படுவதால் அறுவடை செய்து விற்பனை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

ஆத்தூர் துலுக்கனூரை சேர்ந்த விவசாயி மோகன்ராஜ் கூறியதாவது: வாசனை பயிரான கறிவேப்பிலை ஏக்கருக்கு ஆறு ஆயிரம் செடிகள் நடவு செய்து, 15வது மாதத்தில் அறுவடை பணிகள் துவங்குகிறது. அதன்பின் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஏக்கருக்கு 3 முதல் 5 டன் வரை மகசூல் கிடைக்கும். தற்போது கிலோ 10 முதல் 12 ரூபாய் என விலை உள்ளபோது, தொடர் மழை மற்றும் பனிப்பொழிவில் கறிவேப்பிலை செடிகளில் இலைப்புள்ளி, பூஞ்சானை நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

நோயினால் பாதிப்புக்குள்ளான இலைகள் காய்ந்து கருகி உதிர்கிறது. உணவு பொருட்கள் சமைப்பதில் முக்கியத்துவம் பெறும் கறிவேப்பிலை பயிர், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை பட்டியலில் இல்லை. அதனால் அரசு மானியம், கடன் மற்றும் நிவராணம் போன்றவைகள் வழங்குவதில்லை. உணவில் கறிவேப்பிலையை வாசனைக்கு மட்டுமே பயன்படுத்தி தூக்கி வீசுவது போன்று, பயிர் பட்டியலில் இடம் பெறாததால் விவசாயிகள் தவிக்கிறோம், என்றார்.

தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கூறியதாவது: தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டம் சேலம், ஈரோடு, திண்டுக்கல் என 16 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. தோட்டக்கலை பயிரில் மா, வாழை, கோகோ போன்ற பயிர்களுக்கு மானியம், கடன் வழங்கப்படுகிறது. குறைந்தளவு பயிர் செய்யும் கறிவேப்பிலை பயிர் பட்டியலில் இடம் பெறவில்லை. அதனால் கறிவேப்பிலை, மரவள்ளி சாகுபடிக்கு மானியம், கடன் உதவி கிடைப்பதில்லை, என்றனர்.வாசனை பயிரான கறிவேப்பிலைக்கு அரசு பயிர் மானியம், கடன் மற்றும் நிவாரணம் வழங்காமல் இருப்பதால் விவசாயிகள் கண்ணீர் வடித்து வருகின்றனர்.

**இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து விவசாய பணிகளுக்கு தண்ணீர் திறந்துவிட விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,01:10 IST

கோவில்பட்டி : கோவில்பட்டி அருகேயுள் ள இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து விவசாயப் பணிகளுக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தூத்துக்குடி மாவட்டம் முடிந்து விருதுநகர் மாவட்டம் துவங்கும் எல்லையாக அமைந்துள்ள இருக்கன்குடியில், கடந்த 2001ம் ஆண்டில் ரூ.80 கோடி திட்ட மதிப்பீட்டில் அணைக்கட் டு கட்டும் பணிகள் துவங்கி அடுத்த சில ஆண்டுகளில் முடிந்தது. ஆனால் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் அணை கட்டப்பட்டும் சாத்தூர் டு இருக்கன்குடி போக்குவரத்து பாதிக்கும் அபாயம் ஏற்பட்டதால் மீண்டும் உயர்மட்ட பால ம் கட்டப்பட்டு கடந்த 2006ல் அணைக்கட்டு பய ன்பாட்டிற்கு வந்தது.

ஆனாலும் இருக்கன்குடி அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் போதியளவில் மழை பெய்யாததால் தண்ணீர் தேக்க முடியாத நிலை இருந்தது. அதேநேரத்தில் இருக்கன்குடி அணைக்கட்டு விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்ததாக இருந்தாலும், தூத்துக்குடி மாவட்ட விவசாய பணிகளுக்கே அதிகம் பய ன்படுவதாக புதூர் வட்டார விவசாயிகள் மகிழ்கின்றனர். இந்நிலையில் தற்போ து கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக கோவில்பட்டி மற்றும் எட்டயபுரம் பகுதியில் கனமழை பெய்து வருகின்றது. ஆன ால் அணைக்கட்டு மதகுகளின் ஷட்டர்கள் முழுமையாக மூடப்படாததால் தண்ணீர் தேக்க முடியாமல் போ னதாக அப்பகுதி விவசாயிகள் கூறுகின்றனர். இதையடுத்து பல்வேறு தரப்பிலிருந்து வலுவான கோரிக்கைகள் எழுந்ததை தொடர்ந்து அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

தொடர்ந்து கனமழை பெய்ததால் இருக்கன்குடி அணைக்கட்டு அத ன் கொள்ளளவு முழுவதும் தண்ணீர் நிரம்பியது. ஆன ால் தற்போது பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடாமல் இருப்பதால் விவசாயப் பணிகள் பாதிக்கப்படுவதாக அப்பகுதி விவசாயிகள் கூறுகின்றனர். இதுகுறித்து விவசாயிகள் சார்பில் மதிமுக மாநில விவசாய அணி துணை செயலாளர் வரதராஜன் தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறப்பட்டுள்ளதாவது, கோவில்பட்டி கோட்டத்தை சேர்ந்த எட்டயபுரம், புதூர் வட்டார மேற்கு பகுதிகளான அயன்ராஜாபட்டி, உள்பட சுமார் 11 கிராமங்களை சேர்ந்த சுமார் 10 ஆயிரத்து 500 ஏக்கர் மானாவாரி விவசாய நிலங்கள் பயனடையும் வகையில் சாத்தூர் அருகே இருக்கன்குடியில் அர்ஜுனா மற்றும் வைப்பாறு ஆகிய நதிகளை இணைத்து சுமார் 24 அடி கொள்ளளவு கொண்ட அணை கட்டப்பட்டது.

கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாக அணைக்கட்டு பகுதியில் போதிய மழை பெய்யாததால் தண்ணீர் தேக்க முடியவில்லை. இந்நிலையில் இந்தாண்டு பெய்து வரும் தொடர் மழையில் இருக்கன்குடி அணைக்கட்டின் மொத்த கொள்ளளவான 24 அடியும் முழுமையாக நிரம்பியுள்ளது. மேலும் அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருப்பதால், அணையிலிருந்து வினாடிக்கு சுமார் 1200 கனஅடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இந்நிலையில் அணையின் பிரதான கால்வாய் வழியாக எட்டயபுரம் தாலுகா மேலக்கரந்தை, கீழ்நாட்டுக்குறிச்சி பாசன கண்மாய்களுக்கு தண்ணீர் திறந்து விடவேண்டும். இந்த கண்மாய்கள் நிரம்பிய பின்னர் உபரிநீர் ஆற்றங்கரை, அயன்வடமலாபுரம் பாசன கண்மாய்களுக்கு வந்து சேரும். தற்போது இப்பகுதியில் நாற்று நடவு செய்யும் பணிகள் உள்ளிட்ட விவசாயப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிரதான கால்வாயின் பல இடங்களில் உடைப்பு இருப்பதாக கூறும் அதிகாரிகள் தண்ணீர் திறந்து விட மறுத்துள்ளனர்.

ஆனால் உடைப்புகள் அனைத்தும் சரிசெய்யப்பட்டு நல்ல நிலையிலேயே உள்ளது. இப்பகுதி விவசாயிகள் அனைவரும் இருக்கன்குடி அணைக்கட்டு தண்ணீரை நம்பியே விவசாயம் செய்து வருகின்றனர். ஆகவே பாசனத்திற்காக பிரதான கால்வாயில் தண்ணீர் திறந்துவிட தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்ட கலெக்டர்கள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளதாக மனுவில் கூறப்பட்டுள்ளது.

**மழையால் பயிர் பாதிப்பு: குறைதீர் கூட்டத்தில் குவிந்த மனுக்கள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,01:08 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நஷ்ட ஈடு கேட்டு குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் பெரும் அளவில் மனுக்கள் கொடுத்தனர். தர்மபுரி கலெக்டர் அலுவலக சிறுவர் விளையாட்டு பூங்காவில் மக்கள் குறைதீர் கூட்டம் நடந்தது. நேற்று காலையில் இருந்து மழைக்கான அறிகுறிகளுடன் குளிர்ந்த காற்று வீசிய போதும், பூங்காவில் வழக்கம் போல் குறைதீர் கூட்டம் நடந்தது. பல்வேறு கோரிக்கை குறித்த மனுக்களை பொதுமக்களிடம் இருந்து பெற்று சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உடனுக்குடன் பரிந்துரை செய்யப்பட்டது.

காலை 11.30 மணி அளவில் லேசான மழை பெய்ய துவங்கியதும். பூங்காவில் நடந்த குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலக முதல் தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடந்தது. மாவட்டத்தில் கடந்த 20 நாட்களுக்கு மேலாக மழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் பல்வேறு

பகுதியில் பயிர் செய்யப்பட்ட மரவள்ளிக்கிழங்கு, பருத்தி, மஞ்சள் உளளிட்ட பயிர்கள் அதிக அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. பயிர் சேதம் குறித்து வேளாண் துறை, வருவாய் துறை சார்பில் புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நேற்று நடந்த குறைதீர் கூட்டத்தில் புளியம்பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட சில்லாரஅள்ளி, புளியம்பட்டி, நடூர், டேக்கல்நாய்கனபட்டி உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் தங்கள் பகுதியில் பயிர் செய்திருந்த பருத்தி மழைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என கூறி தனித்தனியாக மனுக்களை கொடுத்தனர். பருத்தி காய்ந்து, வெடித்து பருத்தி அறுவடை செய்யும் நேரத்தில் தொடர் மழை பெய்து வருவதால், காய்கள் வெடிக்காமல் காய்களில் உள்ள விதைகளில் செடிகள் முளைக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும், புளியம்பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் 500 ஏக்கருக்கு மேல் பருத்தி பயிர் நாசம் அடைந்திருப்பதாக தெரிவித்தனர்.

இது குறித்து அப்பகுதி விவசாயிகள் சிலர் கூறும் போது, ""புளியம்பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகள் அனைத்தும் மேட்டுப்பாங்கான பகுதியாகும், ஆடி மாதத்தில் பெய்த மழையை வைத்து பருத்தி சாகுபடி செய்திருந்தோம். எந்தாண்டும் இல்லாத அளவுக்கு தற்போது நவம்பர் இறுதியில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், பருத்தி பயிர்கள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டது. கடந்த இரு ஆண்டாக பிடி பருத்தி பயிர் செய்து பாதிப்படைந்தோம். தற்போது, மழையால் பாதிக்கப்பட்டுள்ளது. மழையால் பாதிப்படைந்த விவசாய நிலம் குறித்து உரிய ஆய்வு நடத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்றனர்.இதே போன்று அரூர் தாலுகா, தர்மபுரி தாலுகா ஆகிய பகுதியில் மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும் குறைதீர் கூட்டத்தில் அதிக மனுக்களை பொதுமக்கள் கொடுத்தனர்.

**பழநியில் மழையால் மகசூல் பாதிப்பு : வரத்து குறைவு; விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,23:27 IST

பழநி : பழநியில் தொடர் மழையால் காய்கறி வரத்து குறைந்துள்ளது. ஒரு வாரத்தில் தக்காளி கிலோவிற்கு 10 ரூபாய் உயர்ந்துள்ளது.பழநியில் தொடர்மழை காரணமாக, பெரும்பாலான இடங்களில் விவசாயம் பாதிப்படைந்துள்ளது. விளைபொருட்கள் சேதமடைந்து, மகசூல் குறைந்துள்ளது. பழநி உழவர் சந்தையில் ஒரே வாரத்தில் காய்கறி விலை வெகுவாக உயர்ந்துள்ளது. டிச. 1ல் 18 ஆயிரத்து 725 கிலோ காய்கறி விற்பனைக்கு வந்தது.நேற்று 17

ஆயிரத்து 765 கிலோ மட்டுமே வந்திருந்தது. டிச. 1ல் ஒரு கிலோ 13 ரூபாயாக இருந்த தக்காளி 22க்கும், 22 ரூபாயாக இருந்த கத்தரி 32க்கும் விற்பனையானது.வெங்காயம் 32, பெல்லாரி 30, பச்சை மிளகாய் 34, முருங்கைக்காய் 40, அவரைக்காய் 26, நிலக்கடலை 28, வெண்டை 12, முள்ளங்கி 12, கேரட் 18 ஆகிய விலைகளில் விற்கப்பட்டது.

**நெல்லுக்கு சமச்சீர் உணவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,02:04 IST

மதுரை : "மதுரைநீர் மேலாண்மை பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் காதிரி கூறியதாவது :நெற்பயிருக்கு தழை, மணி, சாம்பல் சத்துகளுடன், துத்தநாக சத்தும் அவசியம். ஒரு ஏக்கருக்கு 40 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச்சத்து, 20 கிலோ சாம்பல் சத்து அளிக்க வேண்டும். தேவைக்கு அதிகமாக யூரியாவை பயன்படுத்தினால், பாசன நீரில் கரைந்தும், ஆவியாகியும் வீணாகும். மேல் உரமாக மூன்று அல்லது நான்கு முறையாக பிரித்து யூரியா உரமிட்டால், சத்துகள் பயிருக்கு முழுமையாக கிடைக்கும். ஒருமுறை இடும் போது அதிகபட்சமாக 22 கிலோவுக்கு மேல் தேவையில்லை, என்றார்.

**மழை நீர் வடிந்த பின்னர் உரமிடுவது அவசியம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,22:37 IST

விருத்தாசலம் : நெல் வயல்களில் மழை நீர் வடிந்த பின்னர் உரமிடுவது அவசியம் என வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விருத்தாசலம் வேளாண்மை உதவி இயக்குனர் அரிதாஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நடப்பு சம்பா பருவத்தில் விருத்தாசலம் வட்டாரத்தில் 17 ஆயிரத்து 500 ஏக்கர் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரமாக பெய்த கன மழையால் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி வடியத் தொடங்கியுள்ளது. வயலில் நீர் வடிந்த பின்னர் நெற்பயிருக்கு உரமிடுவது அவசியம். இத்தருணத்தில் ஏக்கருக்கு 100 கிலோ ஜிப்சம், 10 கிலோ சிங்சல்பேட், 15 கிலோ யூரியா மற்றும் 20 கிலோ பொட்டாஷ் இடவேண்டும். மேலும் விருத்தாசலம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் ஜிப்சம் மற்றும் சிங்சல்பேட் விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகள் வாங்கிப் பயனடையுமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினத் தந்தி

## நுகர்பொருள்கள் விற்பனையில் விறுவிறுப்பு நாட்டில் பிஸ்கெட்டுகள் விற்பனை ரூ.11,000 கோடியை தாண்டியது



*ரத்னா பூஷண்*

*புதுடெல்லி*

*சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், பிஸ்கெட்டுகள் விற்பனை ரூ.11,000 கோடியைத் தாண்டி உள்ளது. நீல்சன் நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளி விவரம் வாயிலாக இது தெரிய வந்துள்ளது. இந்தியாவில், குறிப்பாக கிராமங்களில் தனிநபர் செலவிடும் வருவாய் வியக்கத்தக்க வகையில் அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, பிஸ்கெட்டுகள், பற்பசை, ஷாம்பூ, சரும பராமரிப்பு பொருள்கள், நூடுல்ஸ் போன்ற நுகர்பொருள்கள் விற்பனையில் விறுவிறுப்பு ஏற்பட்டுள்ளது.*

*பற்பசை*

*சென்ற நிதி ஆண்டில், ரூ.2,300 கோடிக்கு பற்பசை வகைகள் விற்பனையாகி உள்ளன. சரும பராமரிப்பு பொருள்கள் மற்றும் ஷாம்பூ ஆகியவை விற்பனை வாயிலாக ஈட்டப்பட்ட வருவாய் முறையே ரூ.3,500 கோடி மற்றும் ரூ.2,400 கோடியாக உள்ளது. ரூ.1,300 கோடிக்கு நூடுல்ஸ் விற்பனையாகி உள்ளன. ஆக, பிஸ்கெட்டுகள் விற்பனை மேற்கண்ட பொருள்களைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக உள்ளது.*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், பொதுமக்கள் பிஸ்கெட்டுகள் வாங்குவதற்காக ரூ.6,320 கோடி செலவிட்டுள்ளனர்.*

*நம் நாட்டில், பிஸ்கெட்தயாரிப்பு மற்றும் விற்பனையில் பார்லே, பிரிட்டானியா மற்றும்*

*ஐ.டி.சி. ஆகிய நிறுவனங்கள் முன்னிலை வகித்து வருகின்றன. இந்தியாவில், பிஸ்கெட்டுகள் விற்பனை அமோகமாக அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, கிளாக்ஸோஸ்மித்கிளைன் மற்றும் யுனைடெட் பிஸ்கெட் ஆகிய பன்னாட்டு நிறுவனங்களும், இந்தியாவில், பிஸ்கெட்டுகள் தயாரிப்பு மற்றும் விற்பனையில் களமிறங்கி உள்ளன.*

*இரண்டு மடங்கு அதிகம்*

*நாட்டின் மக்கள்தொகையில், பிஸ்கெட் சாப்பிடுபவர்கள் எண்ணிக்கை 52 சதவீதமாக உள்ளது. சரும பாதுகாப்பு பொருள்களுடன் ஒப்பிடும்போது (23 சதவீதம்), இது இரண்டு மடங்கிற்கு மேல் அதிகமாகும். குளிர் சாதன பெட்டிகள் பயன்படுத்தும் குடும்பத்தினரின் அளவு 30 சதவீதமாக உள்ளது. ஏனாம் செக்யூரிட்டீஸ் வெளியிட்டுள்ள புள்ளி விவரம் வாயிலாக இது தெரிய வந்துள்ளது.*

*பிஸ்கெட் வகைகளில் குளுக்கோஸ் பிஸ்கெட்டுகள் அதிக அளவில் விற்பனையாகின்றன. இதற்கு அடுத்தபடியாக சாதாரண மற்றும் கிரீம் பிஸ்கெட்டுகள் சிறப்பான அளவில் விற்பனையாகி வருகின்றன.*

*பார்லே நிறுவனம்*

*அளவின் அடிப்படையில், பிஸ்கெட்டுகள் விற்பனையில் 45 சதவீத பங்களிப்பை பெற்று, மும்பையைச் சேர்ந்த பார்லே நிறுவனம் முன்னிலையில் உள்ளதாக நீல்சன் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்நிறுவனம், ஆண்டுக்கு ரூ.5,000 கோடி வருவாய் ஈட்டி வருகிறது.*

*வேளாண் உற்பத்தி அதிகரித்து வருகிறது. இந்நிலையில், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம், பாரத் நிர்மாண் போன்ற மத்திய அரசின் திட்டங்களால் தனிநபர் செலவிடும் வருவாய் அதிகரித்து வருகிறது. பார்லே நிறுவனம், கிராமப்புறங்களில் விற்பனையை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.*

*இந்நிறுவனத்திற்கு விநியோக ஒருங்கிணைப்பு வசதியும் நன்றாக உள்ளது. பிஸ்கெட் விலையும் குறைவாக உள்ளது. இதுபோன்ற காரணங்களால், இந்நிறுவனத்தின் பிஸ்கெட்டுகள் விற்பனை சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது என எர்னஸ்ட் – யங் என்ற ஆலோசனை நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*பிரிட்டானியா*

*பிரிட்டானியா நிறுவனமும் பிஸ்கெட் விற்பனை வாயிலாக சிறப்பான அளவில் வருவாய் ஈட்டி வருகிறது. அளவின் அடிப்படையில், இந்நிறுவனத்தின் பங்களிப்பு 38 சதவீதமாக உள்ளதாக நீல்சன் நிறுவனத்தின் ஆய்வு தெரிவிக்கிறது.*

*இது குறித்து இந்தியா இன்ஃபோலைன் நிறுவனத்தின் ஆய்வாளர் ஆர்ணாப் மித்ரா*

கூறும்போது, “சென்ற ஆறு மாதங்களுக்கு மேலாக பிரிட்டானியா நிறுவனத்தின் பிஸ்கெட்டுகள் விற்பனை 20 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து வருகிறது. எனவே, இந்நிறுவனம் பிஸ்கெட்டுகள் விற்பனையில் மீண்டும் முதலிடம் பிடிக்க வாய்ப்புள்ளது” என்று தெரிவித்தார்.

பங்களிப்பு

இது குறித்து பிரிட்டானியா நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் கூறும்போது, “நிறுவனத்தின் வருவாய், நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வியக்கத்தக்க வகையில் 25 சதவீதம் அதிகரித்துள்ளது. நீல்சன் நிறுவன அறிக்கையின்படி பார்த்தாலும், ஒட்டுமொத்தத்தில் பிஸ்கெட்டுகள் விற்பனையில் நிறுவனத்தின் பங்களிப்பு சீராக இருந்து வருகிறது” என்று தெரிவித்தார்.

## ‘குவாலி டீ–2010’ விருது பெற சிறு விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் தகவல்

குன்னூர், டிச.7–

‘குவாலி டீ–2010’க்கான விருது பெற சிறு விவ சாயிகள் விண்ணப்பிக்க லாம் என்று தேயிலை வாரிய தென்மண்டல செயல் இயக்குனர் அம் பலவாணன் கூறினார்.

விருது வழங்கும் திட்டம்

தேயிலைக்கு நல்ல விலை கிடைக்க தேயிலை வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக தென்னிந் தியாவில் தர மேம் பாட்டில் முன்னோடியாக இருக்கும் சிறு விவசாயிகள் சங்கங்கள் மற்றும் தேயிலை தொழிற் சாலைகள் ஆகிய வற்றை ஊக்குவிக்க விருது வழங்கும் திட்டம் தேயிலை வாரியத்தால் அறிவிக்கப் பட்டு உள்ளது.

இந்த திட்டம் குறித்து தேயிலை வாரிய தென் மண் டல செயல் இயக்குனர் அம் பலவாணன் நிருபர்களிடம் கூறியதாவது:–

ரூ.1 லட்சம் ரொக்கம்

‘குவாலி டீ–2010’ என்ற விருது வழங்கும் திட்டமானது தென்னிந்தியாவின் தேயிலை வர்த்தகத்தை உயர்த்தவும், தேயிலையின் தரத்தை மேம் படுத்தவும் வழங்க திட்ட மிடப்பட்டு உள்ளது.

மேலும் இந்த விருது சிறந்த சிறு விவசாயிகள், சிறு விவசாய சங்கங்கள், சிறந்த தேயிலை தொழிற்சாலைகள் ஆகியவற்றை ஊக்குவிக்கும். தென்னிந்தியாவின் சிறந்த தேயிலை தொழிற்சாலைக்கு முதல் பரிசாக ஒரு லட்ச ரூபாய் ரொக்கமும், 2–ம் பரிசாக

*75 ஆயிரம் ரொக்கமும், 3–ம் பரிசாக 50 ஆயிரம் ரொக்கமும் வழங்கப்படும். சிறந்த தொழிற்சாலைகளாக விளங்கும் 7 தொழிற்சாலை கள் தேர்வு செய்யப்பட்டு, தலா 25 ஆயிரம் ரூபாய் என தகுதி வாரியாக பிரிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்படும். மேலும் வெற்றி பெற்ற 10 தொழிற்சாலைகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும். ஆர்வம் உள்ள தொழிற் சாலைகள் இந்த போட்டிக் கான விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பிக் கலாம். விண்ணப்பங்களை செயல் இயக்குனர், தேயிலை வாரியம், செல்வுட், குன்னூர், நீலகிரி மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண் டும்.*

*மதிப்பெண்கள்*

*போட்டியில் கலந்து கொள்ளும் தொழிற்சாலை கள் ஆவணங்களை ஆய்வின் போது சமர்ப்பிக்க வேண்டும். மேலாண்மை கோட்பாடு களின் அடிப்படையில், மதிப் பெண்கள் வழங்கப்பட்டு மொத்த மதிப்பெண்கள் கணக்கிடப்பட்டு, முதல் 10 தொழிற்சாலைகள் தேர்ந் தெடுக்கப்படும். பூர்த்தி செய் யப்பட்ட விண்ணப்பங்கள் வருகிற 30–ந் தேதிக்குள் குன் னூர் தேயிலை வாரியத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சிறு விவ சாயிகளுக்கு தலா 10 ஆயிரம் ரொக்கமும், நினைவுப் பரிசும் வழங்கப்படும்.*

*உரிமை சான்று*

*விண்ணப்பதாரர் 1 முதல் 10 ஏக்கருக்குள்ளும் அல்லது 11 முதல் 25 ஏக்கர் வரை வைத்திருக்கும் சிறு விவசாயி யாக இருத்தல் வேண்டும். 2 இடங்களில் இருக்கும் தோட்ட விஸ்தீரணத்தை இணைத்து குறைந்த பட்ச நில அளவை காட்டலாம். குத்தகை தோட் டம் குறைந்தபட்சம் 3 வரு டங்கள் வைத்திருப்போரும், இத்திட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.*

*இந்த விருதுக்கான திட்டத் தில், 2010–ல் சிறு விவசாயி வைத்துள்ள மொத்த பரப் பிற்கும் உகந்ததாகும். நில உரிமைச்சான்று அல்லது தேயிலை வாரியத்தின் பதிவு சான்று வைத்திருக்க வேண் டும். விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப் பிக்கலாம். ஒரே நிர்வாகத்தின் கீழ் ஒன்றுக்கும் மேற்பட்ட உரிமையாளர்கள் இருப்பின் ஒரு விண்ணப்பம் மட்டும் ஏற்று கொள்ளப்படும்.*

*50 கேள்விகள்*

*தோட்ட பராமரிப்பிற்கான அனைத்து ஆவணங்கள் (விலை, மகசூல், வரவு, செலவு) ஆய்வின் போது சமர்ப்பிக்க வேண்டும். ஆய்வுக்குழுவின ரால் தோட்டத்தை ஆய்வு செய்து ஆவணங்களை சரி பார்த்ததும், 50 கேள்விகள் அடங்கிய அறிக்கை மூலம் மதிப்பெண்கள்போடப் படும். மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் சிறந்த விவசாயி தேர்ந்தெடுக்கப்படு வார். தென்னிந்தியாவில் சிறப்பாக செயல்பட்டு வரும் சிறந்த 10 சங்கங்களுக்கு விருது வழங்கப்படும்.*

*பதிவு செய்யப்பட்ட அனைத்து சங்கங்களும் இந்த போட்டியில் கலந்து கொள்ள லாம். ஒரு சங்கத்தில் இருந்து ஒரு விண்ணப்பம் மட்டும் ஏற்று கொள்ளப்படும். சிறு விவசாய சங்கத்தில் குறைந்த பட்சம் 50 உறுப்பினர்களின் 50 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும்.*

*3 விருதுகள்*

*2009–2010–ம் ஆண்டிற் கான தகவல்கள் அனைத்தும் ஏக்கர் அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மேற்கண்ட 3 விருதுகளை தேர்வு செய்ய தேயிலை வாரிய அதிகாரிகள் உபாசி வேளாண்மை அறிவியல் மைய விஞ்ஞானிகள் தேயிலை தொழில்நுட்ப வல்லுனர்கள் ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழு ஆய்வு மேற் கொண்டு சிறந்த விவசாயிகள், சிறந்த சங்கங்கள் மற்றும் சிறந்த தேயிலை தொழிற் சாலைகள் தகுதியின் அடிப் படையில் தேர்ந்தெடுக்கப் படும்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

## ***குன்னூர் ஏலத்தில் விலை வீழ்ச்சி ஏற்பட்டதால் 25 சதவீத தேயிலை தூள் தேக்கம்***

*குன்னூர், டிச.7–*

*குன்னூரில் நடந்த தேயிலை ஏலத்தில் 25 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. மேலும் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.*

*தேயிலை ஏலம்*

*குன்னூர் தேயிலை ஏல மையத்தில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. கடந்த 2, 3 ஆகிய தேதிகளில் விற்பனை எண் 48–க்கான தேயிலை ஏலம் நடந்தது.*

*ஏலத்திற்கு மொத்தம் 12 லட்சத்து 39 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 8 லட்சத்து 82 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 ஆயிரம் 57 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. ஒட்டு மொத்த ஏலம் மந்தமாகவே நடைபெற்றது.*

*தேக்கம்*

*உள்நாட்டு வர்த்தகம்களை கட்டவில்லை. வெளிநாட்டு வர்த்தகத்தை பொறுத்த வரை பாகிஸ்தான் மற்றும் ரஷ்யா நாட்டு வர்த்தகர்கள் மட்டுமே கலந்து கொண்டு தேயிலை தூளை குறைந்த அளவு வாங்கினர்.*

*ஏலத்தில் போட்டி இல்லாத காரணத்தால், அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 3 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற் பட்டது. இதனால் 25 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆகாமல் தேக்கம் அடைந் தது.*

உயர்ந்தபட்ச தேயிலை

சிறு தேயிலை தொழிற் சாலைகள் தயாரிக்கும் சி.டி.சி. ரக தேயிலை தூள் 136 ரூபாய் என உயர்ந்தபட்ச விலையாக ஏலம் சென்றது. 40 தேயிலை தொழிற்சாலைகள் தங்கள் தேயிலை தூளை 100 ரூபாய்க்கு விற்பனை செய்தன.

ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலை யாக 214 ரூபாயாக இருந்தது. 35 தேயிலை தொழிற்சாலை கள் தங்கள் தேயிலை தூளை 100 ரூபாய்க்கு விற்பனை செய்தன. சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 40 ரூபாயில் இருந்து 45 ரூபாலய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 80 ரூபாயில் இருந்து 130 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றன.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 40 ரூபாயில் இருந்து 55 ரூபாய் வரையிலும், உயர் விலை தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து 130 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

அடுத்த ஏலம்

விற்பனை எண் 49–க்கான ஏலம் வருகிற 9, 10 ஆகிய தேதி களில் நடக்கிறது.

ஏலத்திற்கு மொத்தம் 12 லட்சத்து 97 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## கூடலூர் விவசாயிகளுக்கு தொடரும் சோகம்: இலை கருகல் நோயால் வாழை விவசாயம் பாதிக்கும் அவலம்



கூடலூரில் இலை கருகல் நோயால் வாழை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

கூடலூர், டிச.7–

கூடலூர் பகுதியில் இலை கருகல் நோயால் வாழை விவசாயம் பாதிக்கப் பட்டுள்ளது. இதனால் வாழை விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டு வருவதால் விவசாயிகள் பெரும் சோகத்தில் உள்ளனர்.

வாழை விவசாயம்

கூடலூர் பகுதியில் பணப் பயிர்களுக்கு இணையாக சமவெளி காய்கறிகளும் விளைவிக்கப்படுகின்றன. இருப்பினும் காய்கறி விலைகள் மலைபோல் உயர்ந்து வரு கிறது. கூடலூர் மண்வயல், புத்தூர்வயல் பகுதிகளில் ஏக்கர் கணக்கில் நேந்திரன் உள்பட பலவகையான வாழை பயிர் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இங்கு விளைவிக்கப் படும் வாழை தார்கள் கேரளா, மேட்டுப்பாளையம் போன்ற பகுதிகளுக்கு அதிகளவு கொண்டு செல்லப்படுகிறது.

இதனால் வாழை விவசாயி களுக்கு கணிசமான லாபம் பெற்று வருகின்றனர். இந்த நிலையில் கடந்த சில மாதங் களாக இலை கருகல் நோய் கூடலூர் பகுதியில் பரவி வரு கிறது. இதனால் ஏக்கர் கணக் கில் பயிரிடப்பட்டு இருந்த வாழைகள் கருகிய நிலையில் காணப்படுகின்றன.

இலை கருகல் நோய் தாக்கம்

இது குறித்து சம்பந்தப்பட்ட துறையினரின் கவனத்துக்கு விவசாயிகள் கொண்டு சென் றும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என வாழை விவசாயிகள் வருத்தம் தெரிவித்துள்ளனர். வாழை களில் தொங்கும் காய்கள் மட்டும் பச்சை நிறத்தில் உள்ளன. மீதமுள்ள இலைகள் காய்ந்து கருகி வருகின்றன. இலை கருகுவதால் வாழையில் உள்ள காய்கள் போதிய விளைச்சல் இன்றி காணப்படுகிறது.

விளைச்சல் இல்லாத வாழையால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். இதே நிலை நீடிக்குமானால் வாழை விவசாயம் அடியோடு பாதிக் கும் அபாயம் எழுந்துள்ளது. எனவே சம்பந்தப்பட்ட துறையினர் உடனடியாக இலை கருகல் நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கோவை மாவட்டத்தில் பெய்த மழையில் 40 ஹெக்டேரில் பயிரிட்டு இருந்த கொண்டை கடலை பயிர்கள் நாசம் வேளாண் அதிகாரிகள் அரசுக்கு அறிக்கை

கோவை,டிச.7–

கோவை மாவட்டத்தில் பெய்த மழையில் 40 ஹெக்டேரில் பயிரிட்டு இருந்த கொண்டை கடலை பயிர்கள் நாசம் அடைந்திருக்கிறது. பயிர்ச்சேதம் குறித்து அரசுக்கு வேளாண் அதிகாரிகள் அறிக்கை அனுப்பி உள்ளனர்.

பரவலாக பெய்த மழை

வடகிழக்கு பருவமழை மற்றும் வங்க கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலைகள் காரணமாக தமிழகத்தில் கடந்த 2 வாரமாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. கடலோர மாவட்டங்களில் கன மழையும், மேற்கு தொடர்ச்சி மலையோர மாவட்டங்களில் சில நாட்கள் பலத்த மழையும், மிதமான மழையும் பெய்து உள்ளது. அந்த வகையில் கோவை மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்தது. குறிப்பாக பொள்ளாச்சி, உடுமலை, வால்பாறை பகுதிகளில் மழை அதிகமாகவும் மற்ற இடங்களில் லேசானது முதல் மிதமான மழை வரையும் பெய்து உள்ளதாக வானிலை மையத்தினர் கணக்கெடுத்து உள்ளனர். இந்த மழையால் மாவட்டத்தில் உள்ள குளம், குட்டைகள், வாய்க்கால்களில் தண்ணீர் தேங்கி உள்ளன.

காய்கறிகள் நாசம்

அணைகளுக்கும் நீர்வரத்து அதிக அளவில் இருந்து வருகிறது. குறிப்பாக கோவை நொய்யல் ஆறு, பவானி ஆறுகளில் சில நாட்கள் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் பல இடங்களில் வயல்வெளிகள், தோட்டங்களுக்குள் தண்ணீர் புகுந்தது. மண்ரோடுகளில் அரிப்பு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

கத்தரி, வெண்டை, தக்காளி, வெங்காயம் மற்றும் உள்பட காய்கறிகள், பந்தல் பயிர்கள் மழையால் சேதம் அடைந்து உள்ளன. அதேபோல் பொள்ளாச்சி உடுமலை பகுதிகளில் கொண்டை கடலை பயிர்களும் பெருமளவு பாதிக்கப்பட்டு உள்ளன. இதுதொடர்பாக கோவை வேளாண்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தி சேதவிபரங்களை கணக்கிட்டு அரசுக்கு அனுப்பி உள்ளனர்.

இதுபற்றி வேளாண்துறை இணை இயக்குனர் நடராஜன் கூறியதாவது:–

40 ஹெக்டேர் கொண்டைகடலை நாசம்

கோவை மாவட்டத்தில் 1 லட்சத்து 500 ஹெக்டேர் நிலத்தில் பயிர் சாகுபடிகள் செய்யப்பட்டு வருகிறது. 15 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பு மானாவாரி நிலங்கள் ஆகும். தற்போது பெய்த மழைக்கு கோவை மாவட்டத்தில் பெரிய அளவில் விவசாய பயிர்கள் பாதிப்பு இல்லை. பொள்ளாச்சி தெற்கு பகுதியில் உள்ள கோலார்பட்டியை சுற்றிய இடங்களில் மானாவாரி நிலங்களில் பயிரிட்டு இருந்த கொண்டை கடலை பயிர்கள் மட்டும் சேதம் அடைந்து உள்ளது.

40 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிட்டு இருந்த கொண்டை கடலை பயிர்கள் மழைக்கு தாக்குப்பிடிக்காமல் நாசம் அடைந்து உள்ளது. இதுதொடர்பாக அரசுக்கு அறிக்கை தயாரித்து அனுப்பப்பட்டு உள்ளது. கோவை மாவட்டம் மலைசார்ந்த பகுதி என்பதால் இங்கே தண்ணீர் பெருமளவு தங்கி சேதத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு கிடையாது. கோவை மாவட்டத்தில் பெய்யும் மழை தண்ணீர் சிறிது நேரத்தில் பள்ளமான

பகுதிகளுக்கு சென்றுவிடும். அதனால் பெருமழைக்காலத்தில்கூட அதிக அளவில் பாதிப்பு ஏற்படுவதில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

உடனடியாக இழப்பீடு

கோவை மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் வழுக்குப்பாறை பாலு கூறும்போது, 'சமீபத்தில் பெய்த மழைக்கு கோவை பகுதியில் பயிரிட்டு இருந்த கத்தரி, தக்காளி, வெண்டை ஆகிய காய்கறிகள் நாசமாகி விட்டது. ஆயிரம் ஏக்கரில் பயிரிட்டு இருந்த தக்காளி, 2 ஆயிரம் ஏக்கரில் பயிரிட்டு இருந்த கத்தரி ஆகியவை ஒட்டுமொத்தமாக நாசமாகிவிட்டன. அதேபோல் பெரும்பாலான இடங்களில் மக்காச்சோளம் நடவு செய்திருந்த இடத்தில் அழுகல் ஏற்பட்டுவிட்டது. இதனால் விவசாயிகள் நிறைய பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு உடனடியாக இழப்பீடு வழங்கவேண்டும்' என்றார்.